# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 250 / 2015. |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 7 |
| Name | : பாரதி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.12.2023.

\- - - - - - -

1, 3, 4, 6 எதிரிகள் ஆஜர். 2 மற்றும் 5 எதிரிகள் ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது, இ.எஸ்.ஐ. ஆர்.ஏ.எம்.ஓ. அலுவலகத்தில் மத்திய மருந்துக் கிடங்கு மருத்துவ அதிகாரியாக மதுரையில் பணியாற்றிவருகிறேன். கடந்த 14.04.2014 ஆம் தேதி மாலை 06.40 மணியளவில் உசிலம்பட்டி, அரசு மருத்துவமனையில் பணியிலிருந்துபோது, சுமார் 47 வயதுடைய பெருமாள்தேவரின் மகன் ஆனந்தன் என்பவர் தன்னை அடையாளம் தெரிந்த 5 நபர்களால் கம்பு மற்றும் அரிவாளால் தாக்கியதாக அன்று மாலை 05.45 மணியளவில் சி.எஸ்.ஐ. பண்ணை

அருகே கம்பு மற்றும் அரிவாளால் தாக்கியதாகக் கூறினார். 1. அவரை நான் பரிசோதித்தபோது கீழ்க்காணும் காயங்கள் இருந்தன. காலின் இடதுபக்க மொழியில் வெட்டுக் காயம் 1 x 1 செ. மீ. இருந்தது. இடது பக்க முழங்காலில் எலும்பு முறிந்ததுபோல காயம் இருந்தது. 2. வலது பக்க தோள்பட்டையில் வலி இருப்பதாகக் கூறினார். அதை பரிசோதித்து பார்த்தபோது மூட்டு விலகியதுபோல் காணப்பட்டது. 3. வலது பக்க வயிற்றில் வலி இருப்பதாகக் கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து, அவரை அரசு ராசாசி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அவர் அங்கே 14.04.2014 முதல் 06.05.2014 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டார். இடது காலில் 2 எலும்புகளும் முறிவு அடைந்து சிகிச்சை வழங்கப்பட்டது. அவருக்குண்டான காயம் கொடுங்காயம் என்று மேல்சிகிச்சை அளித்த மருத்துவர் ரவிச்சந்திரன் கருத்து வழங்கினார். அதனடிப்படையில், அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். மேற்படி காயச் சான்று அ.சா.ஆ.2. மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அதேநேரம், மாலை 06.50 மணியில் பணியலிருந்தபோது 20 வயது மதிக்கத்தக்க ஆசீர்வாதம் என்பவர் சிகிச்சைக்கு ஆஜரானார். அவரை நான் விசாரித்தபோது, தன்னை அடையாளம் தெரிந்த 5 நபர்களால் அதேதினம், 05.45 மணிக்கு சி.எஸ்.ஐ. பண்ணை அருகில் கம்பு மற்றும் அரிவாள் மற்றும் கம்பியால் தாக்கியதாகக் கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது, 1. தலையின் பின்பகுதியிலும், உச்சந்தலையிலும் வெட்டுக் காயம் இருந்தது. அதன் அளவு 6 x 1 x 1 செ. மீ. ஆகும். 2. வலது கை முன்னங்கையில் முறிந்தது போல் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து, மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராசாசி

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவர் 14.04.2014 ஆம் தேதி முதல் 10.05.2014 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு வலது பக்க தோள்பட்டையின் காரை எலும்பு முறிவு ஏற்பட்டதாக எலும்பு மருத்துவர் கருத்து வழங்கினார். அதனடிப்படையில் அவருககு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயச் சான்று அ.சா.ஆ.3 ஆகும். அதேநேரம், அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 18 வயதுடைய பிரசாத் என்பவர், இரவு 7 மணிக்கு சிகிச்சைக்கு ஆஜரானார். அவரை நான் பரிசோதித்தபோது, கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன. தலையின் பின்னந்தலையில் வெட்டுக் காயம் இருந்தது. 6 x 1 x செ. மீ அளவில் இருந்தது. இடது முன்னங்கை முறிந்தது போல் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து, அவரை மதுரை அரசு ராசாசி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அவர் 14.04.2014 முதல் 17.04.2014 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று கருத்து வழங்கப்பட்டுள்ளது. நான் அவருக்கு ஏற்பட்டகாயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளேன். அந்த காயச் சான்று அ.சா.ஆ.4 ஆகும். அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, அதே நேரம், 06.30 மணிக்கு 43 வயதுடைய ஸ்டீபன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு ஆஜரானார். தன்னை அடையாளம் தெரிந்த 5 நபர்களால் அதேதினம் மாலை 05.45 மணிக்கு சி.எஸ்.ஐ. பண்ணை அருகில், கம்பு, கம்பி மற்றும் அரிவாளால் தாக்கியதாகக் கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன. 1. தலையின் பின்னந்த தலையில் வெட்டுக் காயம் இருந்தது. அது 6 x 1 x 1 செ. மீ. அளவில் இருந்தது. 2. இடது பக்க தோள்பட்டை முறிந்தது போல் இருந்தது. மேலும் வலி

இருப்பதாகக் கூறினார். அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து மதுரை ராசாசி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அவர் அங்கு 14.04.2014 முதல் 19.04.2014 வரை உள்நோயாளியாக இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச் சான்று அ.சா.ஆ.5 ஆகும். என்னை புலன் விசாரணை அதிகாரி ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்.

குறுக்கு விசாரணை - இல்லை.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 15.12.2023.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.